# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

# 1998 ஆம் ஆண்டின் 55 ஆம் இலக்க, வெகுசன தொடர்புசாதன நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*(1998 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 02 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)*

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

---

1998, திசெம்பர் மாதம் 04 ஆம் திகதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி** II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

**விலை: ரூபா 7.75** **தபாற் செலவு: ரூபா 3.50**

## 1998 ஆம் ஆண்டின் 55 ஆம் இலக்க, வெகுசன தொடர்புசாதன நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டம்

[1998 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 02 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச. வ. – ஓ. 36/96

### வெகுசன தொடர்புசாதன நிறுவகத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

"வெகுசன தொடர்புசாதன நிறுவகம்" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான ஒரு நிறுவகம், அதன் உறுப்பினர்களால் உடன்பட்டுக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க சொல்லப்பட்ட நிறுவகத்துடன் தொடர்புபட்ட எல்லாக் குறிக்கோள்களையும் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்திற்கென இதுகாலவரை தாபிக்கப்பட்டுள்ளதாலும் : முன்னுரை.

சொல்லப்பட்ட நிறுவகம் எக்குறிக்கோள்களுக்கும், கருமங்களுக்குமாகத் தாபிக்கப்பட்டதோ, அப்பல்வேறு குறிக்கோள்களையும், கருமங்களையும் இதுவரையில் வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாலும் அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாலும் அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல், பொதுமக்கள் நன்மைக்கானதாகவிருக்குமாதலாலும் ;

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம், 1998 ஆம் ஆண்டின் 55 ஆம் இலக்க, வெகுசன தொடர்புசாதன நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் "நிறுவகம்" எனக் குறிப்பிடப்படும்) வெகுசன தொடர்புசாதன நிறுவகத்தில் உறுப்பினர்களாகத் தற்போது உள்ளவர்களும் இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இதன் பின்னர் சேர்த்துக் கொள்ளற்படுபவர்களுமான அத்தகையோரான அத்தனை ஆட்களும் "வெகுசன தொடர்புசாதன நிறுவகம்" என்னும் பெயரின் கீழும், மகுடத்தின் கீழும் இடையறாவழியுரிமை கொண்ட ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாகவிருத்தலும் வேண்டும் ; (இது இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அத்துடன் எல்லா நீதிமன்றங்களிலும் அப்பெயர்கொண்டு அது வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். இது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், அது சுயவிருப்பின்பேரில் மாற்றவும், முழுத்தத்துவமும், அதிகாரமும் உடையதாதல் வேண்டும். வெகுசன தொடர்புசாதன நிறுவகத்தைக் கூட்டிணைத்தல்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

3. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்துகின்றது :—

(அ) வெகுசனத்தொடர்பின் கலை, விஞ்ஞானம், தொழில் மற்றும் நடைமுறை ஆகிய சகல அம்சங்களையும் பாதுகாத்தலும், மேம்படுத்தலும், முன்னெடுத்துச் செல்லலும் ;

(ஆ) வெகுசனத்தொடர்பு எனும் பரந்த களத்தில் ஈடுபட்டுள்ளவர்களது ஈடுபாடுகள், சுயமரியாதை, நலன்கள், உரிமைகள் மற்றும் தொழில்சார் நிலைகளை உயர்த்தலும், பேணிவருதலும் ;

(இ) இலங்கை அரசாங்கத்துக்கும் இலங்கையிலுள்ள வேறு குழுக்களுக்கும் தேவைப்படுமிடத்து, வெகுசனத்தொடர்புத் துறையில் தொழில்சார் விஞ்ஞான மற்றும் திட்டமிட்ட அபிப்பிராயங்கள், ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களை வழங்குதல் ;

(ஈ) ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் கல்வி நிறுவனங்களை ஏற்படுத்திப் பேணுவதன்மூலம் வெகுசன தொடர்பு சாதனம் என்னும் விசாலமான களத்தைப் பாதுகாத்தலும், மேம்படுத்தலும், தரமுயர்த்தலும் ;

(உ) வெகுசனத்தொடர்புத்துறையில் கல்வி மற்றும் பயிற்சித்திட்டங்களையும், பரீட்சைகளையும் ஆரம்பித்தலும், மேம்படுத்தலும், நடாத்தலும் ;

(ஊ) வெகுசனத்தொடர்புத்துறையிலும், அதைச்சார்ந்த விடயங்களிலும், புத்தகங்களையும், அச்சுப் பிரதிகளையும் வெளியிடுதலும், வெளியிடுதலைத் தூண்டுதலும் ;

(எ) வெகுசனத்தொடர்புத்துறையில் ஈடுபட்டுள்ளவர்களின் நன்மை கருதி நிதியையும், நிதியுதவியையும் பெற்றுக்கொள்ளலும், பரிபாலித்தலும் ;

(ஏ) பொதுவில் நிறுவகத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு அல்லது எய்துவதற்கு அவசியமான அல்லது உசிதமான அல்லது இடைநேர்விளைவான அத்தகைய எல்லாச் செயல்களையும் காரியங்களையும் செய்தல்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

4. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவலர்கள், அப்போதைக்கு வலுவிலுள்ள கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைய பின்வருவோரைக் கொண்ட முகாமைக் குழுவொன்றினால் நிருவகிக்கப்படல் வேண்டும் :—

(அ) நிறைவேற்றுத்தலைவர்

(ஆ) அப்போதைக்கு வலுவிலுள்ள கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கு இணங்கத் தெரிவுசெய்யப்படவேண்டியவர்களான இரண்டு துணைத்தலைவர்கள், ஒரு பொதுச்செயலாளர், ஒரு துணைச்செயலாளரும், பொருளாளரும்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது முகாமைக்குழு, இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு முதல் நாளன்று பதவிவகிக்கும் நிறுவகத்தின் முகாமைக்குழு உறுப்பினராதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

5. (1) ஏதேனும் பொதுக்கூட்டத்தில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கினருக்கு குறையாதோரின் வாக்குப் பெரும்பான்மைகொண்டும், உறுப்பினரைச் சேர்த்தல், அவர்கள் விலகுதல் அல்லது அவர்களை விலக்குதல் என்பவற்றுக்காகவும் முகாமைக் குழுவின் பதவிதாங்குநர்களையும் உறுப்பினர்களையும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்கள், முகவர்கள், வேலையாளர்கள் என்போரைத் தேர்ந்தெடுப்பதற்காகவும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் கூட்ட அலுவல்களைக் கையாள்வதில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கை முறைக்கானதும், பொதுவாக கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செயதல், அதன் குறிக்கோள்களை எய்துதல் என்பனவற்றுக்காகவும் இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் ஒவ்வாதனவையாகவிராத விதிகளைக் கூட்டுத்தாபனம் காலத்திற்குக்காலம் ஆக்குதல் அதற்கு சட்டமுறையானதாதல் வேண்டும். அத்தகைய விதிகள் ஆக்கப்பட்டதும், அதைப்போன்ற கூட்டமொன்றிலும், அதேமுறையிலும் அவை மாற்றப்படலாம், திருத்தப்படலாம், அல்லது இல்லாதொழிக்கப்படலாம் அல்லது அவற்றிற்கு எதுவும் சேர்க்கப்படலாம்.

(2) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர் ஒவ்வொருவரும் எல்லா நேரங்களிலும் அப்போதைக்கு வலுவிலுள்ள கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

(3) அப்போதைக்கு வலுவிள்ள கூட்டுத்தாபனத்தின் விதி எதுவும் அல்லது இதன்பின்னர் நிறைவேற்றப்படக்கூடிய விதி எதுவும் கூட்டுத்தாபனத்தின் பொதுக்கூட்டமொன்றில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றிலொரு வாக்குப் பெரும்பான்மையினாலன்றி மாற்றப்படுதலோ, அதற்கு எதுவும் சேர்க்கப்படுதலோ, திருத்தப்படுதலோ அல்லது இல்லாதொழிக்கப்படுதலோ ஆகாது ;

ஆயினும் எவ்வாறாயினும் அத்தகைய சேர்த்தல், திருத்தம் அல்லது இல்லாதொழித்தல் எதுவும் கூட்டுத்தாபனத்தின் முகாமைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்டாலன்றி பயனுறுதல் ஆகாது.

(4) இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு முந்திய திகதியன்று வலுவிலுள்ள நிறுவகத்தின் விதிகள், அவை இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் விதிகளுக்கு ஒவ்வாதனவாகவிராத வரையில் இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளாகக் கருதப்படுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் கணக்குகள்.

6. (1) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள், கூட்டுத்தாபனத்தின் வருமானம், செலவினம் பற்றித் தகுந்த கணக்குப்புத்தகங்களை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள், கூட்டுத்தாபனத்தின் முகாமைக்குழுவால் நியமிக்கப்பட்ட தகைமைபெற்றதொரு கணக்காய்வாளரினால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும் :—

(3) இப்பிரிவில் "தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்பது

(அ) இலங்கையின் வரைவுபெற்ற கணக்காளர் நிறுவனத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவனத்தின் உறுப்பினராக இருப்பதோடு, கணக்காளர் ஒருவராகத் தொழில்புரியவென அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் வழங்கப்பட்ட சான்றிதழ் ஒன்றை உடையவரான ஆள் ஒருவர் என்று பொருளாகும் ; அல்லது

(ஆ) எந்தக் கணக்காளர் குழுமமொன்றின் ஒவ்வொரு வதிவுள்ள பங்காளரும் இலங்கையின் வரைவுபெற்ற கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராகவிருப்பதோடு, கணக்காளர் ஒருவராகத் தொழில்புரியவென அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் வழங்கப்பட்ட சான்றிதழ் ஒன்றை உடையவராகவும் இருக்கின்றாரோ அந்தக் கணக்காளர் குழுமம் ஒன்று எனப்பொருளாகும். ;

ஆதனத்தைக் கொள்ளுவதற்கும் பணம் திரட்டுவதற்கு மான தத்துவம்.

7. (1) கூட்டுத்தாபனமானது ஏதேனும் கொள்வனவு, அளிப்பு, கொடை, இறுதிவிருப்பாவணக்கையளிப்பு, கொடுத்துமாற்றல் என்பன மூலமாக அல்லது வேறுவகையான ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளவும், வைத்திருக்கவும் கூட்டுத்தாபனத்தால் கொள்ளப்பட்ட அல்லது வைத்திருக்கப்பட்ட ஏதேனும் அத்தகைய ஆதனததைக் கையுதிர்க்கவும் சட்டப்படி இயலுமாதலும் ஆற்றலுடையதாதலும் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனம், அதனது குறிக்கோள்களை முன்னேற்றுவதற்கும் அவசியமான பணத்தை ஏதேனும் பிணைப்பொறுப்பின்மீது கடன் எடுப்பதற்கும் அல்லது திரட்டுவதற்கும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் ஏதேனும் கடனை அல்லது கடப்பாட்டை பொருத்தமானதென எண்ணப்பட்ட அத்தகைய முறையில் தீர்த்துக்கொள்வதற்கும் தத்துவமுடையதாதல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனம் உள்ளூர் மூலகங்களிலிருந்தாயினும்சரி, வெளிநாட்டு மூலகங்களிலிருந்தாயினும்சரி நிதிகளைத் திரட்டலாம்; அத்துடன் ஒப்பப்பணங்களையும், அளிப்புகளையும், கொடைகளையும், நன்கொடைகளையும் பெறலாம்.

(4) இச்சட்டத்தின்கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட விதிகளின்கீழ் கூட்டுத்தாபனத்தால் கொள்ளப்பட்ட அல்லது வைத்திருக்கப்பட்ட எல்லா அசைவுள்ள, அசைவற்ற ஆதனங்களும் அத்துடன் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்பட்ட அல்லது கூட்டுத்தாபனத்தால் பெறப்பட்ட பணங்களும் அதன் குறிக்கோள்களை முன்னேற்றுவதற்கு, விதிகளுக்கிணங்க கூட்டுத்தாபனத்தால் வைத்திருக்கப்படுதலும் பயன்படுத்தலும் பிரயோகிக்கப்படுதலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.

8. கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, கூட்டுத்தாபனத்தின் நிறைவேற்றுக் கூட்டுத்தலைவரின் கட்டுக்காப்பில் வைத்திருக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், நிறைவேற்றுத் தலைவரினதும் கூட்டுத்தாபனத்தின் அப்போது வலுவிலுள்ள விதிகளுக்கு இணங்க அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் எவரேனும் அலுவலரினதும் முன்னிலையிலல்லாது எத்தகையதுமான சாதனமெதிலும் பொறிக்கப்படலாகாது. அவர்கள் தாம் சமுகமாயிருந்தனர் என்பதற்கு அச்சாதனத்தில் தமது பெயர்களை எழுதி ஒப்பமிடல் வேண்டும். அத்தகைய ஒப்பமிடல் சாட்சிக்காரராக எவரேனும் ஆள் ஒப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் நிதியம்.

**9.** (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண் டிருத்தல் வேண்டும். கூட்டுத்தாபனத்திற்காக அல்லது அதன் கணக்கால் கொடை, அன்பளிப்பு, நன்கொடை, ஒப்பப்பணம், உதவுதொகை, கட்டணங்கள் அல்லது மானியக்கொடைகள் என்றவகையாக இதுகாலவரை அல்லது இதன் பின்னர் பெறப்படவுள்ள எல்லாப் பணங்களும் கூட்டுத்தாபனத்தின் முகாமைக்குழு தீர்மானிக்கக்கூடியவாறான ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் வைப்பிலிடுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனம் இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங் களையும் கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் கூட்டுத்தாபனத்தினால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத் தீர்ப்பதற் கான எல்லாப் பணத்தொகைகளும் நிதியத்தில் இருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் வருமானத்தினையும் பயன்படுத்துதல்.

**10.** எவ்வகையிலேனும் பெறப்பட்டதான கூட்டுத்தாபனத்தின் வருமானமும் ஆதனமும் இதன்கண் எடுத்துக் கூறப்பட்ட குறிக்கோள்களை மேம்படுத்துமுகமாக மட்டுமே பயன்படுத் தப்பட வேண்டுமென்பதுடன் அதன் பாகமெதுவும் பங்கி லாபம், மிகையூதியம் என்ற வகையாகவோ அல்லது வேறு எவ்வகையிலோ இலாபம் என்ற வகையாகக் கூட்டுத்தாபன உறுப்பினர்களுக்கு நேரடியாகவோ அல்லது மறைமுக மாகவோ செலுத்தப்படுதலும் கைமாற்றப்படுதலுமாகாது.

கழகத்திடமிருந்து செல்மதியாகவுள்ளனவும் அதற்குச் செலுத்தப்படவுள்ளனவுமான கடன்கள்.

**11.** இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு முந்திய நாளன்று நிறுவகத்திற்குரிய எல்லாக் கடன்களும் பொறுப்புகளும் கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்படுதலும், கொடுத்துத் தீர்க்கப்படுதலும் வேண்டும் என்பதுடன் நிறுவகத்திற்கு வருமதியாகவுள்ள எல்லாக் கடன்களும் செலுத்தப்படற்குரிய ஒப்பப்பணங்கள், உதவுதொகைகள் ஆகியனவும் இச்சட்டத் தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப் படுதலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களின் பொறுப்பு.

**12.** கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர் எவரும் கூட்டுத்தாப னத்தின் தனிசுகளை அல்லது பொறுப்புகளைத் தீர்க்கும் நோக்கத்திற்காக அல்லது வேறு ஏதேனும் நோக்கத்திற்காக, அத்தகைய தனிசையோ, பொறுப்புகளையோ தீர்க்கும் வகையில் கூட்டுத்தாபனத்திற்கு அவரிடமிருந்து கொடுக்குமதி யாகக் கூடியவாறான அத்தகைய ஆண்டு ஒப்பப்பணத்தின் தொகையிலும் கூடுதலாக ஏதேனும் உதவுதொகையை செலுத்துவதற்கு ஆளாதல் ஆகாது.

13. கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன் மேல் அதனது எல்லாக் கடன்களையும் பொறுப்புகளையும் திருப்தி செய்ததன் பின்னர் எத்தன்மையானதுமான ஏதேனும் ஆதனம் எஞ்சியிருப்பின், அத்தகைய ஆதனங்கள் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படலாகாது, ஆனால் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களைக் கொண்டதும் அல்லது கொண்டவையும், அத்துடன் எந்தக் கழகம் அல்லது அவற்றின் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளிப்பதிலிருந்து அதன் அல்லது அவற்றின் விதிகளினால் தடை செய்யப்பட்டுள்ளதோ அல்லது தடைசெய்யப்பட்டுள்ளனவோ அந்த வேறேதேனும் கழகமாக அல்லது கழகங்களாக இருப்பதும் அல்லது இருப்பனவையுமான வேறேதேனும் கழகத்திற்கு அல்லது கழகங்களுக்குக் கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும். அந்தக் கழகம் அல்லது கழகங்கள் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களால், கூட்டுத்தாபனம் கலைக்கப்படும்போது அல்லது கலைக்கப்படு வதற்கு முன்னராகத் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

*கலைப்பின்மீது எஞ்சியிருப்பதான ஆதனம்.*

14. இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும், குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் அல்லது இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவர்களும், அவர்கள் மூலம், அவர்களிலிருந்து அல்லது அவர்களின்கீழ் உரிமைகோரு பவர்களும் தவிர்ந்த எவரேனும் ஆட்களினதும் உரிமைகளை யேனும் பங்கப்படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணுதல் வேண்டும்.*

15. இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும், குடியரசின் உரிமைகளில் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா: (உள்நாட்டு) ரூபா *1,387*; (வெளிநாட்டு) ரூபா *1,849* ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.*32*, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் ரோட், கொழும்பு *01* என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.